# பயப்படாதிருங்கள், நான் உங்களையும், உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன். ஆதி 50 : 21

**காலம் வரும் வரை காத்திருங்கள்.**

உங்களைக் குறித்தும், உங்கள் குழந்தைகளைக் குறித்தும் கவலை கொண்டிருக்கிற என் அன்பு சகோதரனே, சகோதரியே, இந்த மாத வாக்குத்தத்தமாக வேதம் சொல்லுகிற வசனத்தை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.

**பயப்படாதிருங்கள்**

நான் உங்களையும், உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்பதாக.

கடந்த ஆண்டிற்குள் திருமணத்தை வைத்துவிட வேண்டும் என்று எவ்வளவோ பிரயாசப்பட்டீர்கள் குழந்தையை கர்த்தர் கொடுப்பார் என்று நம்பியிருந்தீர்கள் வேலையில்லாப் பிரச்சனை தீர்ந்து விடும் என எதிர்பார்த்தீர்கள் வெளிநாட்டுப் பிரயாணம் வாய்க்கும் என நம்பியிருந்தீர்கள் இந்தியாவுக்கு வந்து விடலாம் என திரும்பினீர்கள் லைசென்ஸ் கிடைத்து விடும் என எதிர்பார்த்தீர்கள் தங்குமிடம் பிரச்சனை இதோடு ஒழிந்தது என நினைத்தீர்கள் வராத பணம் வரும் என நினைத்தீர்கள் பரீட்சையில் வெற்றி பெற்று விடுவோம் என நினைத்தீர்கள் வியாதியிலிருந்தும், பிசாசின் போராட்டத்திலிருந்தும், பில்லி சூனியக் கட்டிலிருந்தும் தேவன் விடுதலை கொடுப்பார் என்று நிச்சயமாய் நம்பியிருந்தீர்கள் கடன் இத்தோடு ஒழிந்தது என நினைத்தீர்கள் புதுத் தொழில் ஆரம்பித்து விடலாம் என நினைத்தீர்கள் ஆனால் முடிவோ தோல்வி.

**“நினைத்தபடி ஒன்றும் நடக்கவில்லை”**

இந்த வருடமாவது, கர்த்தர் ஜெயத்தைக் கொடுக்க மாட்டாரா என ஏங்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**பயப்படாதிருங்கள்.**

**நான் உங்களையும், உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன்** என்பதாக வேதம் சொல்கிறது.

நிச்சயமாகவே, உங்கள் பிரச்சினைக்கு முடிவு உண்டு; உங்கள் நம்பிக்கை வீண் போகவே போகாது. அது அதற்கென்று குறிப்பிட்ட காலங்கள் உண்டு. காலம் வருவதற்கு முன்னமே கவலைப்பட வேண்டாம்.

ஆபிரகாமைப் பார்த்து, கர்த்தர் சொன்னார், நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் – என்பதாக. அப்பொழுது ஆபிரகாமுக்கு வயது 75 ஆக இருந்தது.

பல வருடங்களுக்குப் பின்பு, ஆபிரகாம் கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே என்றான். அதோடு இதோ, என் வீட்டிலே பிறந்த பிள்ளை வேலைக்காரன் எலியேசர் சுதந்தர வாளியாய் இருக்கிறான் என்றான்.

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, இவன் எலியேசர் உனக்கு சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப் பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்றார். **அவன் கர்த்தரை விசுவாசித்தான். அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்.**

ஆனால் சாராய், ஆபிராமை நோக்கி, நான் பிள்ளை பெறாதபடிக்கு கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார். என் அடிமைப் பெண்ணோடே சேரும். ஒரு வேளை அவளால் என் வீடு கட்டப்படும் என்றாள்.

ஆகார், ஆபிராமுக்கு இஸ்மவேலைப் பெற்ற போது 86 வயதாயிருந்தான்.

பல வருடங்கள் கழித்து, தேவன் ஆபிராமை நோக்கி, நான் சாராளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனைத் தருவேன் என்பதாக.

அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து, நூறு வயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? என்று தன் இருதயத்தில் சொல்லிக் கொண்டு, இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினான்.

அப்பொழுது தேவன், உன் மனைவியாகிற சாராள் நிச்சயமாய், உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள். அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிடுவாயாக என்றார்.

**இவன் தான் சுதந்தரவாளி.**

ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் பிறப்பவன் தான் சுதந்தரவாளி. அல்லேலூயா!

என் அன்பு சகோதரனே, சகோதரியே, டி.வி.ஜி.எம் அலுவலகத்திலிருந்து ஒரு செய்தியை ஜெபத்துடன் எழுத ஆரம்பித்தேன். நினைத்த வாக்குத்தத்தம் ஒன்று, ஆனால் எழுதிய வாக்குத்தத்தம் ஒன்று. கர்த்தரின் கரமே இதைச் செய்தது.